BRAMPTON

**Media Release**

உடனடி வெளியீட்டுக்காக

## எதையும் சாராத, இயற்கை வழி உணவுப்பொருள் உற்பத்தி செய்யும் கொட்டகையை அமைக்க ப்ராம்ப்ட்டன் நகரசபை ஒப்புதல் வழங்குகிறது

ப்ரம்ப்ட்டன், ON (மே5, 2021) – இன்றைய தினம், ப்ராம்ப்ட்டன் நகர சபையானது, எதையும் சாராத இயற்கை வழி உனவுப்பொருள் உற்பத்திக்கான கொட்டகை என்ற, தனக்குத்தானே நிலைதிருக்கும் வகையிலான உணவுப்பொருள் மறு உற்பத்தி செய்யும் முறைக்கு ஒப்புதல் அளித்துள்ளது, இந்த உற்பத்தி முறையானது, ப்ராம்ப்ட்டனில் உள்ள பல குடும்பங்களுக்குத் தேவையான உணவுப்பொருளை உற்பத்தி செய்யும். இந்த கோடையில் தொடங்கி ஆறு மாத மாதிரி தொடக்க திட்டமாக, 8220 மிஸ்ஸிஸ்ஸாகா சாலையில் 212 ஆம் எண் கொண்ட ப்ராம்ப்ட்டன் தீயணைப்பு நிலையத்தில் இந்த உணவுபொருள் உற்பத்திக் கொட்டகை அமைந்துள்ளது.

எதையும் சாராத இயற்கை வழி உணவுப்பொருள் உற்பத்திக்கான கொட்டகையானது நேச்சர் ஹார்மனி (Nature Harmony ) அமைப்பினால் ஏற்படுத்திக் கொடுக்கப்படுகிறது மற்றும் இது எரிசக்தி ஆற்றல் எதுவுமே தேவைப்படாத கிரீன்ஹவுஸ் கட்டமைப்பாகும்; இந்த கொட்டகையில் இருந்து உணவுப்பொருள் உற்பத்தி செய்து 2021 கொல்லைப்புறத் தோட்டம் அமைக்கும் திட்டத்தில் ஒரு பகுதியாக ப்ராம்ப்ட்டனில் உள்ள குடும்பங்களுக்கு உணவுப்பொருள் விநியோகிக்க, ரீஜெனெரேஷன் அவுட்ரீச் கம்யூனிட்டி (Regeneration Outreach Community) க்கு நன்கொடையாக வழங்கப்படும்.

இந்த புதுமை படைக்கும் தொழில்நுட்பமானது, அதன் சொந்த சுற்றுச்சூழல் அமைப்பைக் கொண்டுள்ளது; தனக்கேயான மண், ஹைட்ரோபோனிக்ஸ் மற்றும் அக்வாபோனிக்ஸ் அமைப்புகளின் கலவையைப் பயன்படுத்தி மனிதர் உண்ணக்கூடிய இயற்கை பழங்கள் மற்றும் காய்கறிகளையும், மீன்களையும் வளர்க்கிறது. இந்தக் கொட்டகையானது முற்றிலும் கழிவுகள் அற்றதாகவும் மற்றும் கார்பன் வெளிப்பாடு இல்லாததாகவும் இருக்கிறது; இது சூரியசக்தி மற்றும் காற்றினால் புதுப்பிக்கத்தக்க சக்தியால் இயக்கப்படுகிறது; மேலும் இது கடுமையான குளிர்காலத்தை எதிர்கொள்ளும் வகையில் கட்டப்பட்டுள்ளது.

நிலைத்து நிற்கவல்ல இந்த உள்ளரங்க பண்ணையில் அனைத்து வயதினருக்கும் பரஸ்பர கற்றலை ஊக்குவிப்பதற்காக கல்வி நடவடிக்கைகள் மற்றும் செய்முறைசோதனைகள் மற்றும் தேவையான அனைத்து பொருட்களும் கொண்ட ஒரு அமைப்பும் அடங்கும்.

ப்ராம்ப்ட்டனின் சமுதாய தோட்டத் திட்டமானது, ப்ராம்ப்ட்டன் க்ரோ க்ரீன் சுற்றுச்சூழல் மாஸ்டர் திட்டத்தின் குறிக்கோள்களை முன்னெடுக்கிறது; இது நகர்ப்புற விவசாயத்தை, நகரத்திற்கு ஒரு வாய்ப்பாகச் சுட்டிக்காட்டுகிறது. 2020 ஆம் ஆண்டில் கொல்லைப்புற தோட்டத் திட்டத்தில் ப்ராம்ப்ட்டன் தீயணைப்பு மற்றும் அவசர சேவைகள் அமைப்பும் கூட இதில் பங்கேற்றது; இது, இந்தக்குழுவினர் உணவுப்பொருட்களை வளர்த்து, உற்பத்தி செய்தவற்றை சமுதாயத்திற்கு கணிசமான அளவில் நன்கொடையாக வழங்க உதவியது.

**அறிஞர் கூற்றுக்கள்**

" ப்ராம்ப்ட்டன் நகர சபையானது, ப்ராம்ப்ட்டனின், எதையும் சாராத இயற்கை உணவுப்பொருள் உற்பத்திக் கொட்டகையை ப்ராம்ப்ட்டன் தீயணைப்பு நிலையத்தில் அமைக்க ஒப்புதல் அளித்துள்ளது, மற்றும் ப்ராம்ப்ட்டன் தீயணைப்பு ஊழியர்களால் ஆதரவளிக்கப்படுகிறது. ப்ராம்ப்ட்டனில் புதிய மாதிரிகளின் நிலைத்திருக்கும் தன்மையை நிலைநாட்டுவதில் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம், குறிப்பாக எங்கள் குடியிருப்பாளர்களை நேரடியாக ஆதரிக்கின்றோம் மற்றும் 2050 ஆம் ஆண்டில் *GHG* களை 80% அளவிற்கு குறைப்பதற்கான எங்கள் பயணத்திற்கு துணை நிற்கிறோம். "

- *பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

"ப்ராம்ப்ட்டன் ஒரு பசுமை நகரமாகும், எங்கள் குடியிருப்பாளர்களுக்கான உணவு பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பிற்கான புதுமை படைக்கும்படியானயான தீர்வுகளை நாங்கள் வரவேற்கிறோம். எதையும் சாராத இயற்கை உணவுபொருள் உற்பத்திக் கொட்டகை தனக்குத் தானே சொந்த ஆற்றலை உருவாக்கிக் கொள்கிறது, முற்றிலும் கழிவுகள் அற்ற அமைப்பை பேணுகிறது, மழைநீரை அறுவடை செய்து வைத்துக் கொள்கிறது, மேலும் கார்பனைக் கைப்பற்றி புதிய ஆக்ஸிஜனை வெளியிடுகிறது. இது நகர்ப்புற விவசாயத்தில் ஒரு மைல்கல் ஆகும், மேலும் முன்னணியாளராக இருந்து வழிகாட்டுவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். "

- *ரொவீனா சான்ட்டோஸ், பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 1 & 5, தலைமைப்பொறுப்பு, சமுதாய சேவைகள் துறை, ப்ராம்ப்ட்டன் நகரம்*

"கோவிட்-19 தொற்று பரவல் காலத்தில், ப்ராம்ப்ட்டனின் கொல்லைப்புற தோட்டத் திட்டத்தின் ஒரு பகுதியாக, பல குடியிருப்பாளர்களுக்கு, எதையும் சாராத இயற்கை உணவுபொருள் உற்பத்தி செய்யும் கொட்டகை உதவிகரமாக இருக்கும். தனக்குத்தானே நிலைக்க வைத்துக்கொள்ளும் தன்மை கொண்ட, இயற்கை உணவுப்பொருளை வளர்க்கும் இந்த மாதிரியானது உள்நாட்டில் வளர்ந்து வரும் உணவின் தேவை, மதிப்பு மற்றும் வழிமுறைகளை நிரூபிக்கிறது; மேலும், நிலைத்திருக்கவல்ல எதிர்காலத்திற்கான கருவிகள் மற்றும் அறிவை அளித்து எங்களுக்கு ஆற்றல் அளிக்கிறது. "

- *டக் வில்லன்ஸ், நகர கவுன்சிலர் வார்டுகள் 2 & 6; தலைமைப் பொறுப்பு, கொல்லைப்புற தோட்டம் அமைக்கும் திட்டம், ப்ராம்ப்ட்டன் நகரம்*

“ ப்ராம்ப்ட்டனில் உணவுபொருள்ப் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழலை நிலைத்திருக்க வைக்கும் தன்மைக்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொடுக்க நகர ஊழியர்கள் கடமைப்பட்டுள்ளனர். 212 ஆம் எண் கொண்ட ப்ராம்ப்ட்டனின் தீயணைப்பு நிலையத்தில் உள்ள ஊழியர்களுக்கு எதையும் சாராத இயற்கை உணவுபொருள் உற்பத்தி செய்யும் கொட்டகையை பேணிப் பராமரிப்பதற்கான பயிற்சி அளிக்கப்படும், இது ப்ராம்ப்ட்டனின் நிலைத்திருக்க வைக்கும் தன்மைக்கான  இலக்குகளை அடைய உதவும். ”

- *டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

“நேச்சர் ஹார்மனி (Nature Harmony *)* என்பது லாப நோக்கற்ற ஒரு அமைப்பாகும், இது பூமியை பண்படுத்தல்,  மேம்படுத்துதல், வசதி செய்தல் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது. எதையும் சாராத இயற்கை உணவுபொருள் உற்பத்தி செய்யும் கொட்டகையை அமைக்கும் திட்டமானது, ப்ராம்ப்டன் கொல்லைப்புற தோட்டத் திட்டம் மற்றும் ப்ராம்ப்ட்டன் தீயணைப்பு நிலையம் ஆகியவற்றுடன் இணைந்து, நகரம், சமூகங்கள் மற்றும் தனிநபர்களுக்கான இயற்கை சார்ந்த உறவை மறுபரிசீலனை செய்ய ஊக்குவிக்கிறது மற்றும் எங்கள் தற்போதைய நுகர்வோர் மாதிரிகள் மூலமாக,  நிலைத்து நிற்கவல்ல  மற்றும் மீளுருவாக்கம் செய்ய முடிகின்ற முயற்சிகளை ஊக்குவிக்கிறது. *”*

- *ஃபில் ஃபங்க், செயல் இயக்குனர், நேச்சர் ஹார்மனி (Nature Harmony)*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 700,000 மக்களையும் 75,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது**. நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும்,  சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான  ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். Twitter, Facebook, மற்றும் Instagram ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். www.brampton.ca இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் பரிமாற்றம்
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca